நல்லூர் ... நூலகம்
யாழ்ப்பாணம்

முரசொலி

பக்கங்கள் நான்கு விலை ரூபா: 5-00

முரசு 06 ஒலி 183 ஆங்கீரச வைகாசி 15 (28 05 1992) வியாழன்

## தமிழக அரசு கெடுபிடியால் நக்கீரன் பதிப்பாளர் மரணம்!

நக்கீரன் வார இதழில் "இங்கேயும் ஒரு ஹிட்லர்" என்ற தலைப்பில் இந்திராசுகந்திர ... ராஜா க. சுப்புவினால் ஒரு கட்டுரை எழுதப்பட்டது. இதனால் ஆத்திரம் கொண்ட முதல்வர் ஜெயலலிதா "பரிசை மக்கள் கொடுப்பார்கள்" என்று அறிவித்ததும் அ.தி.மு.க காரர்கள் நக்கீரன் பத்திரிகையை தீயிட்டுக் கொளுத்தினார்கள். இத்தாக்குதல்களை எதிர்த்தும் கண்டித்தும் "நக்கீரன்" தலையங்கம் வெளியிட்ட போது அதன் பதிப்பாளர் ஆர். கணேசன் அரசத் துரோகக் — 04-ம் பக்கம் பார்க்க

## விருதுநகர் பஸ் குண்டு; பலியானோர் 7 ஆக அதிகரிப்பு

கடந்த திங்களன்று தமிழகம் விருதுநகரில் இடம் பெற்ற பஸ் குண்டு வெடிப்பில் இறந்தவர்களின் தொகை 7 ஆக அதிகரித்துள்ளது.

குண்டுவெடிப்பில் தாயும் மகளுமாக இருவர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டமை தெரிந்ததே.

சாரதி உட்பட மேலும் ஐவர் ஆஸ்பத்திரியில் நேற்று மரணமாகினர்.

## இந்திய வானொலி இயக்குநர் பஞ்சாப்பில் வெட்டிக்கொலை

பஞ்சாப்பில் பட்டியாலா பகுதி அகில இந்திய வானொலி நிலைய இயக்குநர் பஞ்சாப் தீவிரவாதிகளால் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டார்.

இவரது உடல் கிராமம் ஒன்றில் வீசியெறியப்பட்டிருந்தது. வானொலியில் தம்மை போராளிகள் தீவிரவாதிகள் எனக் கூறாது சுதந்திர வீரர்கள் எனக் கூறுமாறு தீவிரவாதிகள் விடுத்த அறிவுறுத்தலைமீறியமைக்கே இவர் வெட்டிக் கொல்லப்பட்டதாக கூறப்படுகிறது.

## காணி சுவீகரிப்பு பிரதேச சபைகளிடம்

தற்போது அமைச்சுகளினால் கையாளப்படும் கடமைகள் சிலவற்றை அதிகாரம் பரவலாக்கும் திட்டத்தின் கீழ் பிரதேச சபைகள் மட்டத்தில் செயற்படுத்துவதற்கென குறிப்பிட்ட சில கடமைகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

இதுவரை காலமும் அமைச்சினால் அரச அதிபர்கள் நடைமுறைப் படுத்துவதற்கு ஒதுக்கப்பட்ட கடமைகள் இனிமேல் பிரதேச சபைகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

★ அரச தேவைகளுக்கு காணி சுவீகரித்தல்

★ அரச காணிகளை நீண்டகால குத்தகைக்கு விடல்

★ கடவுச் சீட்டு விண்ணப்பம் வழங்குதலும் விண்ணப்பங்களை கொழும்புக்குச் சமர்ப்பித்தலும்

★ பிறப்பு, இறப்பு, திருமணப்பதிவு ஆகியன பதிதல்.

★ பொதுத் தேர்தல் உள்ளூராட்சித் தேர்தல் சம்பந்தமான கடமைகள் 06

## சிவில் விமானம் இறங்க பாகிஸ்தான் அனுமதி

பாகிஸ்தான் உளவுப் படையினரால் தாக்கப்பட்டு உடல் நிலை பாதிக்கப்பட்டுள்ள இந்திய தூதரக அதிகாரி ராஜேஷ் மிட்டலை இந்தியாவுக்கு கொண்டு செல்ல இந்திய சிவில் விமானத்தை தரையிறங்க பாகிஸ்தான் அனுமதித்துள்ளது.

முன்னதாக இராணுவ விமானம் ஒன்றை இறக்க இந்தியா அனுமதி கோரிய போதிலும் அதற்கு பாகிஸ்தான் அனுமதி வழங்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கண்ணாடிக் கூண்டுக்குள் ராவும், ஜெயலலிதாவும்

ராஜீவ் காந்தி சிரார்த்த தினத்தன்று ஸ்ரீ பெரும்புதூரில் பிரதமர் நரசிம்மராவ், முதலமைச்சர் ஜெயலலிதா ஆகியோரைச் சுற்றி பெரும் பொலிஸ் பாதுகாப்பு அமைக்கப்பட்டிருந்ததாகவும் இருவரும் அமர்ந்திருந்த குண்டு பாயாத கண்ணாடியைச் சுற்றி கொமாண்டோக்கள் காவல் புரிந்ததாகவும் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## சு.க.தலைமைப்பீடம் இன்று கொழும்பில் கூடுகிறது

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான பாராளுமன்ற தெரிவுக் குழுவை பகிஷ்கரிக்கும் தனது முன்னைய முடிவை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இடைநிறுத்தி வைத்துக்கட்டு, தெரிவுக்குழு நடவடிக்கைகளில் பங்குபற்றுவதற்கான ஒரு சூழ்நிலை தற்போது உருவாகியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆராயவென மேற்படி கட்சியின் தலைமைப்பீடம் இன்று கொழும்பில் கூடுகிறது.

இதேவேளை பகிஷ்கரிப்பு நடவடிக்கையை கைவிடுமாறு தமிழ், முஸ்லிம் அரசியல் கட்சிகள் நேற்று கூட்டாக சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவைச் சந்தித்துக் கோரின.

## ஜனநாயகத்தைக் குலைக்கும் சதியில் விரக்தியடைந்த சக்திகள்

ஜனநாயகத்தைக் குலைப்பதற்கான சதியில் விரக்தியடைந்த சக்திகள் ஈடுபட்டுள்ளன என ஜனாதிபதி பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

சில சதிகாரர்கள் ஜே.வி.பி, பயங்கரவாதிகள் என்ற போர்வையில் சதிநாச வேலைகளில் ஈடுபடுகிறார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டினார்.

# கோயம்புத்தூரில் பெரும் வெடிவிபத்து!

## பாதுகாப்புத்துறை வெடிமருந்து தொழிற்சாலை தகர்ப்பு

தமிழகத்தில் கோயம்புத்தூர் மாவட்டம் அரவங்காடு பகுதியில் அமைந்துள்ள பாதுகாப்புத்துறையின் வெடிமருந்துத் தொழிற்சாலை நேற்று வெடிச்சம்பவம் ஒன்றில் தகர்த்தெறியப்பட்டது, இதில் தொழிற்சாலை ஊழியர்கள் 6 பேர் பலியாகினர். 25 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை தொழிற்சாலையில் ஏற்பட்ட இந்த பயங்கர வெடிப்பினால் அரவங்காடு பகுதியும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் அதிர்வுக்குள்ளானதாக இந்திய வானொலி தெரிவித்தது.

இச் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்ய விசாரணைக் குழு ஒன்றை இந்திய பாதுகாப்புத்துறை அமைத்துள்ளது. விசாரணைக் குழு இது நாசச்செயலா அல்லது விபத்தா காரணம் என விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளதாம்.

இதனிடையே இச்சம்பவம் தொடர்பாக தகவல் வெளியிட்ட இந்திய தரப்புச் செய்திகள், தொழிற்சாலை ஊழியர்கள் நைட்ரசன் இனிசரின் அமிலத் தொட்டியிலிருந்து அமிலத்தின் தூயதன்மையை அறிய அதன் ஒரு பகுதியை பிரித்தெடுத்தபோது வெடிவிபத்து ஏற்பட்டதாக தெரிவித்தன.

தொழிற்சாலை முற்றாக தகர்க்கப்பட்டுள்ளதாகவும் பலியானவர்களில் இருவரின் சடலங்கள் இடிபாடுகளினுள் தொடர்ந்து தேடப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழ் நாட்டில் இவ்வாரத்தில் நடைபெற்ற மூன்றாவது வெடிச் சம்பவம் இது என்பது குறிப்பிடத்தக்கது.

## ஊரடங்கு நீக்கம்

யாழ் மாவட்டத்தில் அமுல் செய்யப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்று மாலை 6 மணி முதல் நீக்கப்பட்டதாக கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்தது. நேற்றுக் காலை ஊரடங்கு அமுலுக்கு வந்தமை தெரிந்ததே.

## கொழும்புடன் தொடர்பு

காங்கேசன்துறை களஞ்சியங்களில் உணவுப் பொருள்களை ஏற்றிவருவது குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கம் கொழும்புடன் தொடர்பு கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது 47

## நாளொன்றில் 4கோடி ரூபா பாதுகாப்பிற்கு செலவு

ஸ்ரீலங்கா இராணுவத்தின் அபரிமிதமான வளர்ச்சியும் அதனால் அரசுக்கு ஏற்பட்டுள்ள பாரிய யுத்தசெலவுகள் குறித்தும் நேற்று வெரித்தாஸ் வானொலி சில தகவல்களை வெளியிட்டது.

சர்வதேச பாதுகாப்பு சஞ்சிகை, பிரிட்டானிக்கா கலைக்களஞ்சியம், கனடா பத்திரிகைகள் ஆகியவற்றை ஆதாரமாக கொண்டு இவ்விவரங்கள் வெளியிடப்பட்டன.

1991 ஆம் கணக்கெடுப்பின்படி ஸ்ரீலங்கா இராணுவத்தின் ஆளணி ஒரு லட்சத்து 56 ஆயிரம் பேர், இதன்படி இராணுவத்தில் 80 ஆயிரம் பேர், கடற்படையில் 14 ஆயிரம் பேர், விமானப்படையில் 6 ஆயிரம் பேர், விசேட அதிரடிப்படையில் 5 ஆயிரம் பேர் பொலிஸில் 28 ஆயிரம் பேர்

— 04 ஆம் பக்கம் பார்க்க

## தமிழக அரசுக்கு அறுவை சிகிச்சை வரலாம் - பண்ருட்டி

தமிழக அரசின் முறைகேடுகள் அளவு கடந்து போகிறதே என்பதில் இந்திய அரசுக்கு கவலையில்லாமல் இல்லை எந்த நேரத்திலும் அறுவைச் சிகிச்சை வரலாம்.

இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி சட்ட மன்ற உறுப்பினரும் முன்னால அமைச்சருமான பண்ருட்டி இராமச்சந்திரன் ஜூனியர் விகடன்வார இதழுக்கு வழங்கிய பேட்டி யொன்றில தெரிவித்துள்ளார்

"ஜெயலலிதாவை பொறுத்த வரையில எம்.ஜி. ஆர் போல இருப்பார் என்று

— 4 ஆம் பக்கம் பார்க்க

வற்றாப்பளை சம்பவம் குறித்து முல்லை. செஞ்சிலுவை

# செஞ்சிலுவை சமிக்கை காட்டியும் ஷெல்தாக்குதல் தொடர்ந்தது!

கடந்த 18 ஆம் திகதி காலை 10 30 மணிக்கு முல்லைத்தீவு வற்றாப்பளை ஆலயத்தில் முல்லைத்தீவு செஞ்சிலுவை வைத்தியப் பிரிவு கடமைக்குச் சென்றது மதியம் 12 30 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமிலிருந்து முதலாவது ஷெல் ஏவப்பட்டது.

முதலாவது ஷெல் தாக்குதலை தொடர்ந்து செஞ்சிலுவைத் தொண்டர்கள் தமது சீருடைகளில் வெளியில் வந்து வாகன சமிக்கை வெளிச்சத்தைப் போட்டனர் செஞ்சிலுவை கொடியும் ஏற்றப்பட்டது.

இவ்வாறு வற்றாப்பளை படுகொலை குறித்து விளக்கமளித்துள்ள முல்லைத்தீவு செஞ்சிலுவைக்குழு செயலாளர் அறிவித்துள்ளார்.

செஞ்சிலுவை இந்த சமிக்கைகளை காட்டியும் முகாமிலிருந்து தொடர்ந்து ஷெல்கள் வந்து வீழ்ந்தன

இதனால் 25 க்கும் மேற்பட்டோர் பலியாகினர் 40க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இதில் முல்லைத்தீவு செஞ்சிலுவை சங்க பொருளாளர் க. சண்முகலிங்கம் தொண்டர் செல்வன் றஸிநிமால் ஆகியோர் பலியாகினர் தாதி செல்வி சாந்தினிதேவி படுகாயமடைந்தார் செஞ்சிலுவை வாகனமும் சேதமடைந்தது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'அ.தி.மு.க.வுக்கு அரசியல் முதிர்ச்சி அடியோடு இல்லை'

"விடுதலைப் புலிகளை ஒழித்துவிட்டோம் என்று சொல்லிவிட்டும் கூடவே, புலிகளால் ஆபத்து என்று சொல்வது முப்பது நாளில் விலை குறைப்போம் என்று சொல்லிவிட்டு பால், அரிசி விலைகள் பஸ் கட்டணம் ஆகியவற்றை ஏற்றுவது, ஊர்வலம் நடத்துவதைக் கட்டுப்படுத்தும் எண்ணத்துடன் சட்டங்களைக் கொண்டுவந்து பின் ஜனநாயக நெறி பற்றிப் பேசுவது, சுயநிதிக் கல்லூரிகளை அனுமதித்து அதே நேரத்தில் அவற்றின் அதிகாரத்தை மறைமுகமாகப் பறிப்பது என்று தொடர்ந்து பல தவறுகளைச் செய்கிறது இந்த அரசு. அ.தி.மு.க.வுக்கு அரசியல் முதிர்ச்சி அடியோடு இடையாது"

மேற்கண்டவாறு ஜனதா தள் எம்.எல். ஏ டாக்டர் குமாரதாஸ் கருத்துவெளியிட்டுள்ளார்

## திருநாவுக்கரசு

அண்ணா புரட்சித் தலைவர் தமிழக முன்னேற்றக் கழகத் தலைவரான எஸ். திருநாவுக்கரசு எம். எல். ஏ கருத்து வெளியிடுகையில் அமைச்சர்களும். முதல்வரும் மானியக் கோரிக்கையின் போது சுமமாகக் கேள்விக்குப் பதில் சொல்வதில்லை. அதிகாரிகள் 'டைப்' செய்து கொடுத்ததை வாங்கிவந்து விடுகிறார்கள் எனவே திடீரென ஒரு இடைக்கேள்வி எழும்பும்போது பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறார்கள். அதனால் அவர்களைக் காப்பாற்றுவதற்காகச் சபாநாயகர் இடைமறித்துக்கேள்வி எழுப்புவதையே தடுக்கிறார் என்று எண்ணத்தோன்றுகிறது கலைஞர் ஆட்சியிலோ, புரட்சித் தலைவர் ஆட்சியிலோ இப்படி நடந்ததில்லை என்றும் சொன்னார்.

## பண்ணிசை வகுப்பு

யாழ். பல்கலைக்கழக, பரமேஸ்வரன் ஆலயத்தில் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் மாலை 4 மணி முதல் 5 மணிவரை பண்ணிசை வகுப்பு நடைபெற்று வருகிறது, இவ்வகுப்பை தேவார இசைமணி தாவடி பூர் இரா. திருஞானசம்பந்தன் நடாத்தி வருகிறார். 18

# வற்றாப்பளைச் சம்பவம்; மேலும் சில தகவல்கள்

வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலயம் மீதான இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல் பற்றி எமது முல்லைத்தீவு நிருபர் அனுப்பியுள்ள மேலதிக செய்திகள் இவை

★ பொங்கல் தினத்தன்று, ஆலயத்திலிருந்து ஒன்றரை மைலுக்கு அப்பாலுள்ள முல்லை இராணுவ முகாமிலிருந்து நான்கு ஷெல்கள் ஆலயத்தைக் குறிவைத்து ஏவப்பட்டன.

இவற்றில் 18 05 92 நண்பகல் 12 30 மணியளவில் ஏவப்பட்ட முதலாவது ஷெல் நந்திக்கடலில் விழ்ந்து வெடிக்காது புதையுண்டது மற்றைய இரண்டும் ஆலய மதிலிலும், வேறு இடங்களிலும் விழ்ந்து வெடித்தன. நான்காவது ஷெல் கோவில் வீதியில் விழுந்து வெடித்து 15க்கும் மேற்பட்ட பக்தர்களின் உயிர்களைப் பலிகொண்டது.

★ இவ் ஆலய உற்சவம் பற்றி ஆலய நிர்வாகக் குழுத் தலைவர் எம். குகதாசன் முல்லை அரச அதிபர் மூலமும், செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலமும் இராணுவ தலைமையகத்துக்கு எழுத்து மூலமாக முன்கூட்டியே அறிவித்திருந்தார்.

★ ஷெல் தாக்குதலினால் காயமடைந்தோரில் பலர் உடனடியாகத் தகுந்த சிகிச்சை வழங்கப்படாமையினால் இரத்தப் பெருக்கினாலேயே மரணமடைய நேர்ந்தது. முல்லை வைத்தியசாலை இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதியில் செயலிழந்து இருப்பதும், புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் போதிய வசதியின்றி செயற்பட்டு வருகின்றமையும் இதற்குக் காரணமாகும். 52

# கடத்தலில் ஈடுபட்டனராம் 7 தமிழர்கள் இத்தாலியில் கைது

போதைப் பொருள் கடத்தல் முயற்சியில் ஈடுபட்ட ஏழு இலங்கைத் தமிழர்கள் இத்தாலியில் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாக 'திவயின' என்ற சிங்களப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இவர்கள் 40 இலட்சம் டொலர் பெறுமதியான போதைப் பொருள்களை கடத்த முயன்றபோதே கைது செய்யப்பட்டதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

# ஓய்வூதியர் சம்மேளனத்தின் கொழும்புப் பிரதிநிதி நியமனம்

வடமாநில ஓய்வூதியர் சங்கங்களின் சம்மேளனம் தனது நலன்புரிச் சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்கத்துடன் கொழும்பு பிரதிநிதியாக சட்டத்தரணியும், சத்திய ஆணையாளரும், இளைப்பாறிய குடும்ப ஆலோசகருமான திரு. எஸ். ஜெயரட்ணம் அவர்களை நியமித்துள்ளது.

கொழும்புப் பிரயாணம் பல சிக்கல்களையும் பல அபாயங்களையும் கொண்டதால் ஓய்வூதியர் கொடுப்பனவுகளை துரிதப்படுத்தும் முகமாகவே இந்த நியமனம் செய்யப்பட்டுள்ளது.

திரு. சி. வீ. கே. சிவஞானம் தலைமையிலான மேற்படி சம்மேளனத்தில் பத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியர் நலன்புரிச் சங்கங்கள் வடமாநிலத்தில் வடமராட்சி, தென்மராட்சி, தீவகம், வலி வடக்கு, வலி மேற்கு. நல்லூர், யாழ்ப்பாணம் போன்ற உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளில் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

சங்கத்தின் சேவையைப் பெற விரும்பும் சங்க உறுப்பினர்கள் தமது ஓய்வூதியர் சங்கங்கள் மூலமாக இல. 30/2 லோறிஸ் வீதி, பம்பலப்பிட்டி கொழும்பு - 4 என்ற விலாசத்துடன் தொடர்பு கொள்ளலாம் என சம்மேளனச் செயலர் திரு பி. எஸ். திருச்செல்வம் தெரிவித்தார்.

# புலிகளுக்கு ஆதரவளித்ததாக 42 தமிழகத்தவர் கைது!

விடுதலைப்புலிகள் இயக்கத்தை இந்திய அரசு தடை செய்துள்ளதையடுத்து தமிழ் நாட்டில் புலிகளுக்கு உதவிய பலர் கைது செய்யப்பட்டு வருவதாக செய்தியொன்று தெரிவிக்கிறது

சில தினங்களில் மட்டும் தமிழகத்தில் புலிகளுக்கு உதவிய குற்றச்சாட்டின்பேரில் 42 தமிழகத் தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

# அமெரிக்க ஜனாதிபதிக்கு எதிராக புதிய இயக்கம் உருவாகிறது

அமெரிக்காவில் "மூவ்மென்ட் ஒவ் ஒப்போசிங் புஷ்" என்னும் அமெரிக்க அதிபர் புஷ்ஷின் கொள்கைகளை, (விசேடமாக அமெரிக்க இராணுவ ஆயுதங்களை, ஆசிய நாடுகளுக்கு விற்பனை செய்வதை) எதிர்க்கும் படை ஒன்று உருவாகியுள்ளது.

இந்தப் படையில் அங்கம் வகிப்பவர்கள் அத்தனை பேரும் பெண்கள் அமெரிக்காவின் இராணுவத் தளபாட விற்பனையாலும், உதவியாலும் தினமும் பல ஆயிரக்கணக்கான உயிர்கள் உலகில் அநியாயமாகப் பலியாகின்றன இந்த ஈனச் செயல் உடனடியாக தடுக்கப்படவேண்டும் என்று கோஷம் போடும் இம் மங்கையர்கள், சமீபத்தில் மெல்போன் நகரில் உலகக் காங்கிரஸ் மையத்தில் அதிபர் புஷ் ஒரு மாநாட்டில் கலந்துகொள்ள வந்த போது. முகம் எல்லாம் கறுப்பு மை பூசி, கறுத்த நீண்ட அங்கிகளை அணிந்து தலை முடியை விரித்துவிட்டு சவப்பெட்டி ஊர்வலம் ஒன்றையும் நடத்தினார்கள். (16)

## திருமுறைப் பெரு விழா

நல்லை ஸ்ரீ சட்டநாத சுவாமி ஆலயத்தில் திருஞான சம்பந்தர் குருபூசைத் தினத்தன்று அகில இலங்கைத் திருமுறை மன்றத்தினரால் திருமுறைப் பெருவிழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. (18)

# சர்வோதய பிரதித்தலைவர் இராஜினாமா

சர்வோதய இயக்கத்தின் பிரதித்தலைவரான ஹாரிஷா குமார நவரத்ன அவ்வியக்கத்திலிருந்து இரண்டு வாரங்களுக்கு முன்பு இராஜினாமாச் செய்துள்ளார்,

சர்வோதய இயக்கத்தின் வளர்ச்சியுடன் பின்னிப் பிணைந்து சுமார் இருபத்தி ஒன்று வருடங்கள் அந்த இயக்கத்தில் தொண்டாற்றிய இவர் சர்வோதய இயக்கம் அரசியலில் ஈடுபடுகின்றது என்ற கருத்து கிராமிய மக்கள் மனதில் பதிந்து விட்டதாலேயே தாம் இராஜினாமாச் செய்துள்ளதாக கூறியுள்ளார்,

சர்வோதயத் தலைவர் ஏ. ரி. ஆரியரட்ணவின் உறவினரான ஹார்ஷா நவரத்ன காமினி திசாநாயக மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது பல குடியேற்றத் திட்டங்களை அமுல்படுத்தியவர்,

இதன் காரணமாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் அனுராதபுர அமைப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுவதை ஹார்ஷா நவரத்ன மறுத்துள்ளார்.

தெளிவான கோட்பாடுகளின் அடிப்படையில் தொண்டர் நிறுவனம் ஒன்றை தாம் ஆரம்பிக்கவிருப்பதாக ஹர்ஷா நவரத்ன தெரிவித்துள்ளார்.

# 'தமிழ் அரசி' வார இதழ் சசிகலா கணவர் வெளியிடுகிறார்

ஜெயலலிதாவின் அன்பிற்கும் கோபத்திற்கும் அவ்வப்போது ஆளாகி, எப்போதும் செய்திகளில் அடிபட்டுக் கொண்டிருப்பவர் அவர் ஒரு காலத்தில் ஜெயலலிதாவின் உதவியாளராக இருந்தவரும் சசிகலாவின் கணவருமான எம். நடராஜன் மறுபடியும் முக்கியத்துவம் பெற விரும்பி அதற்கு ஜெயலலிதாவையே கருவியாகத் தேர்ந்தெடுத்தது ஒருவகையில் பொருத்தம்தான்

அவர் ஆசிரியராகப் பொறுப்பேற்கும் "தமிழ் அரசி" வார இதழின் துவக்க விழா சென்னையில் ஐந்து நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் நடைபெற்றது. ஆயிரம் பேர் கலந்து கொண்டார்கள் முதல் இதழின் அட்டையில் முதல்வரின் படம் வெளியிடப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களுக்கு முன்பு நடராஜனுடன் தனக்கு சம்பந்தமில்லையென ஜெயலலிதா அறிவித்திருந்தார். ஆனால் ஜெயலலிதா அப்படி சொன்னதை மக்கள் காதில் பூ சுற்றலே சசிகலா இன்னும் ஜெயலலிதாவின் நிழலாகவே இருக்கிறார், எனப் பலரும் நினைக்கிறார்கள் கும்பகோணத்துக்கு அவருடன் கூடப் போனவர் இந்த சசிகலா.

காவிரிநீர்ப் பிரச்சினை விவகாரத்தில் ஜெயலலிதாவைப் புகழ்ந்து தள்ளுகிறது முதல் இதழ்.

எனவே அம்மா புகழ்பாட இன்னுமொரு பத்திரிகை தமிழகத்தில் வெளிவர ஆரம்பித்திருக்கிறது!

## வீதியில் சிப்பிகள்

யாழ் - வட்டுக்கோட்டை வீதியில் ஓட்டுமடம் சந்தியிலிருந்து காக்கைதீவு வரையிலான பகுதியில் உடைக்கப்பட்ட ஊரிகளும், சிப்பிகளும் வீசப்படுவதனால் சைக்கிளோட்டிகளும் பாத சாரிகளும் பெரும் சிரமத்தை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## சிங்கள பாதுகாப்பு அமைப்பு கேள்வி

# ஒழுங்கு நிலைநாட்டப்பட்டால் கிழக்கில் சிப்பாய்கள் பலியாவது ஏன்?

"ஓரிரண்டு மாதங்களுக்கு முன்பு. கிழக்கிலிருந்தும் யாழ். குடாநாடு தவிர்ந்த வடபகுதிகளிலிருந்தும் விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை இராணுவம் ஒழித்து விடும் என அரசாங்கம் கூறியது

ஆனால் அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் மக்கள் மனதில் குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளன."

இவ்வாறு சிங்கள ஆரக்ஷய அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

'ஒப்பரேஷன் ஹப பாற' மற்றும் 'ஒப்பரேஷன் அக்குணுபாற' என்ற நடவடிக்கைகளினால புலிகளின் பல தளங்கள் அழிக்கப்பட்டு விட்டதாகவும், பல விடுதலைப்புலிகள் கொலலப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது'

'கிழக்கு அனேகமாக விடுதலைப்புலிகளிடம் இருந்து விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் அரச கட்டுப்பாடு மீள நிலைநாட்டப்பட்டு விட்டதாகவும் கூறப்பட்டது, யாழ்ப்பாணக் குடாநாடுமீது இறுதித் தாக்குதல நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் கூறப்பட்டது.

'ஆனால சடுதியாக எல்லாத் தாக்குதல நடவடிக்கைகளும் நிறுத்தப்பட்டு விட்டன'

'இதற்கிடையில வடக்கு-கிழக்கின் பல பகுதிகளிலும் பல இராணுவத்தினர் கொலலப்படுவது பற்றி நாம் கேள்விப்படுகிறோம்.

மட்டக்களப்பு - அம்பாறை பிரதேச விடுதலைப் புலிகள் அமைப்பாளர் மாமபழம் சுரேஷ் "ஐலண்ட்" பத்திரிகைக்கு எழுதிய கடிதத்தில அரசாங்கம் தனது கட்டுப்பாட்டை கிழக்கில் மீண்டும் நிலைநாட்டி விட்டதென்ற கூற்றை மறுத்திருந்ததுடன் கிழக்கில் விடுதலைப்புலிகள் அதிக எண்ணிக்கையில் செயற்படுவதையும் பல சிங்கள சிப்பாய்களை கொன்றிருப்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்

அண்மைக்கால நிகழ்வுகள் இக்கூற்றின் உண்மையை வெளிக்காட்டுகின்றன. கிழக்கில் ஒழுங்கு நிலைநாட்டப்பட்டு விட்டது என்றால் இத்தனை சிப்பாய்களும் ஏன் கொல்லப்படுகின்றார்கள் என்பதே மக்கள் மனதை உறுத்தும் கேள்வியாகும்"

இவ்வாறு அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வமைப்பு முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியவைத் தலைவராகக் கொண்ட சிங்கள பௌத்த இனவாத அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது.

...நூலகம்
யாழ்ப்பாணம்



# உலர் உணவு விநியோக அட்டவணை

01.06.92 முதல் பின்வரும் அட்டவணைப் படி நான்கு வாரங்களுக்குமான இலவச உலர் உணவு விநியோகிக்கப்படும் என யாழ் செயலக எல்லா உதவி அரசாங்க அதிபர், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர், பல நோ. கூ சங்க பொதுமுகாமையாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

| பொருள் | விலை ரூ | ச | 1 அங்கத்தவர் எடை | ரூ ச | 2 அங்கத்தவர் எடை | ரூ ச | 3 அங்கத்தவர் எடை | ரூ ச | 4 அங்கத்தவர் எடை | ரூ ச | 5 அங்கத்தவர் எடை | ரூ ச |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 16 | 60 | 2 கிலோ | 33 20 | 2 கிலோ | 33 20 | 4 கிலோ | 66 40 | 5 கிலோ | 83 00 | 6 கிலோ | 99 60 |
| மாவு | 13 | 60 | 2 கிலோ | 27 20 | 2 கிலோ | 27 20 | 3 கிலோ | 40 80 | 4 கிலோ | 54 40 | 5 கிலோ | 68 00 |
| சீனி | 27 | 00 | 600 கிராம் | 16 20 | 1 கிலோ | 27 00 | 1 கிலோ | 27 00 | 1 கிலோ | 27 00 | 1 கிலோ 600 கிராம் | 43 20 |
| பயி. பரு | 50 | 00 | 100 கிராம் | 5 00 | 250 கிராம் | 12 50 | 450 கிராம் | 22 50 | 700 கிராம் | 35 00 | 1 கிலோ | 50 00 |
| சவர்க்காரம் | 50 | 00 | | | 1 பக்கற் | 50 00 | 1 பக்கற் | 50 00 | 1 பக்கற் | 50 00 | 1 பக்கற் | 50 00 |
| கெ. பொரு | | | | 2 40 | | 4 10 | | 3 30 | | 2 60 | | 4 20 |
| அனுமதிக்கப்பட்ட உணவுப்பொருட்களின் பெறுமதி | | | | 84 00 | | 154 00 | | 210 00 | | 252 00 | | 315 00 |

47

## வழமைபோல இயக்கம்

நேற்று யாழ் குடாநாட்டில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும் அரச திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள் வர்த்தக நிறுவனங்கள், சந்தைகள் வழமைபோல் இயங்கின.

மற்றும் பாடசாலைகள் போக்குவரத்துச் சேவைகள் யாவும் ஒழுங்காக நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

6. 14

## நாடென்றில்...

மற்றும் துணைப்படையில் 10 ஆயிரம் பேர்.

புலிகளுக்கு எதிரான போருக்கு பெரும் மனிதசக்தி தேவைப்படுவதையே இத்தொகை காட்டுவதாக அதில் தெரிவிக்கப்பட்டது

ஸ்ரீலங்காவின் இராணுவச் செலவு 1981 இல் 11 ஆயிரம் கோடி ரூபா நாட்டின் மொத்த செலவில் ஒதுக்கப்பட்டது (3 சதவீதம்) 1991 இல் இது 16 ஆயிரத்து 700 கோடி ரூபாவாக அதிகரித்தது (20 சதவீதம்).

1981இல் அரசிற்கு கிடைத்த வெளிநாட்டு உதவியில் 13 சதவீதமே பாதுகாப்பிற்கு செலவழிக்கப்பட்டது.

1991 இல் வெளிநாட்டு உதவியில் 60 சதவீதம் பாதுகாப்பிற்கு செலவழிக்கப்பட்டுள்ளது. இதனால் நாட்டின் அபிவிருத்தி பாதிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாளொன்றுக்கு நாலரைக் கோடி ரூபா செலவழித்து அரசு போரில் ஈடுபட்டுள்ளது.

## அதிக காலம் நீடிக்காது

"இன்றைய அரசாங்கம் அதிக நாள்களுக்கு நீடிக்காது எந்த நேரமும் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு தேர்தல் நடைபெறலாம்" என்று ஹொரகலில் நடைபெற்ற நிகழ்ச்சியொன்றில் பேசுகையில் அனுர பண்டாரநாயக்கா கூறினார்.

- அனுரா

## 7வது தொடர் உணவு முத்திரை

7வது தொடர் உணவு முத்திரையின் சித்திரை வைகாசி மாதங்களுக்குரிய புள்ளிகளுக்கு தற்போது உணவு பொருள்கள் வழங்கப்படுவதாக யாழ் செயலகம் வட்டாரம் தெரிவித்தது 47

## தமிழக அரசுக்கு...

எண்ணி ஆரம்பத்தில் ஆதரித்தவள் நான் ஆனால் எம். ஜி. ஆர் மறைவுக்குப் பின் நடராஜனும் சசிகலாவும் எப்போது ஜெயலலிதாவிடம் குடிவந்தார்களோ அப்போதே இந்த அம்மையார் எம். ஜி. ஆர் போல இருக்கமாட்டார் எனக்கு தெளிவாகி விட்டது திருநாவுக்கரசுடன் சேர்ந்து நான் உடனே வெளியேறிவிட்டேன் என வெளியேற்றத்தை நாட்டு மக்களுக்கும் தெரிவித்து விட்டேன் எனவும் இப்பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

## தமிழக...

குற்றச்சாட்டுகளுக்காக ஏப்ரல் பத்தாம் திகதியன்று கைது செய்யப்பட்டு ஏப்ரல் இருபதாம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டார்

விடுதலை செய்யப்பட்ட ஒரு மணி நேரத்துக்குள் நெஞ்சுவலியென தனியார் மருத்துவ மனையில் சேர்ந்த அவர் ஏப்ரல் இருபத்தேழாம் திகதி மூளையில் இரத்தக் குழாய் வெடித்து இறந்தார்

## கோரிக்கை

இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்று மீண்டும் இந்தியாவிலிருந்து கப்பல் மூலமோ, அல்லது விமானம் மூலமோ வந்து யாழ் குடாநாட்டில் தங்கி இருப்பவர்கள் தங்களுடைய விவரங்களை செஞ்சிலுவைச் சங்கத்தில் பதியுமாறு கோரப்படுகிறார்கள்

## ஸ்ரீமாவை வற்புறுத்த 7 கட்சிகள் சந்திப்பு

பாராளுமன்ற தெரிவுக்குழுவை பகிஷ்கரிப்பது என ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எடுத்த முடிவை மீள்பரிசீலனை செய்யுமாறு கோரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவை 7 தமிழ்க் கட்சிகளும் முஸ்லிம் காங்கிரசும் கோரவுள்ளனவாம்

பாராளுமன்றத்தில் அரசாங்கமும் சுதந்திரக்கட்சியும் இடையில் எழுந்த முரண்பாட்டிற்கு தெரிவுக்குழு பலியாகி விடக்கூடாது என இவர்கள் ஸ்ரீமாவோவை வற்புறுத்தவுள்ளனர்

ஸ்ரீமாவோ தற்போதைய நிலையினை கருத்திற்கொண்டு இது தொடர்பாக ஏனைய கட்சிகளுடன் பேச்சு நடத்த இணக்கம் தெரிவித்துள்ளார்

இதனிடையே பாராளுமன்றத் தெரிவுக்குழு தனது பணிகளை பூர்த்தி செய்யும் இறுதிக் கட்டத்தில் உள்ளதாகவும் தனது அறிக்கையையும் தயாரிக்கும் நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

நலம் தானா......................?
உடலும் உள்ளமும் நலம் தானா...............?

கண்டறிய இன்று மாலை
வாருங்கள்!

'சுகநலம்' - கூத்து

இடம்:- யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி, யுபிளி மண்டபம்

நேரம்:- இன்று மாலை 5.00 மணி

யாழ், மிட் — ரவுண் றோட்டறக்ட் கழகம் வழங்கும் நிகழ்ச்சி.

05049

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

மகாபொல கொடுப்பனவு
5ஆம், 6ஆம் தவணைப் பணங்கள்

மேற்படி கொடுப்பனவுக்கான ஒழுங்குகள் பின்வருமாறு செய்யப்பட்டுள்ளன

முதலாம் வருடம் (1-6 தவணைப்பணங்கள்)
மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதிக விஞ்ஞானப்பிரிவு
28-05-92 9.00 - 12.00 மு.ப.
01-06-92 9.00 - 12.00 மு.ப.
03-06-92 9.00 - 12.00 மு.ப.

இரண்டாம் வருடம்
மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதிக விஞ்ஞானப்பிரிவு
28-05-92 1.30 - 3.00 பி.ப.
01-06-92 1.30 - 3.00 பி.ப.
03-06-92 1.30 - 3.00 பி.ப.

மூன்றாம் வருடம்
மருத்துவபீடம்
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதிக விஞ்ஞானப்பிரிவு
29-05-92 9.00 - 12.00 மு.ப.
02-06-92 9.00 - 12.00 மு.ப.
04-06-92 9.00 - 12.00 மு.ப.

நான்காம் வருடம்
மருத்துவபீடம் (4ஆம், 5ஆம் வருடங்கள்)
கலைப்பிரிவு
வர்த்தகப்பிரிவு
வியாபார நிர்வாகப்பிரிவு
உயிரியல் விஞ்ஞானப்பிரிவு
பௌதிக விஞ்ஞானப்பிரிவு
29-05-92 1.30 - 3.00 பி.ப.
02-06-92 1.30 - 3.00 பி.ப.
04-06-92 1.30 - 3.00 பி.ப.

கொடுப்பனவின் போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை
1. பல்கலைக்கழக மாணவர் அடையாள அட்டை
2. ரூபா 2/- பெறுமதியான முத்திரை

பதிவாளர்

05050

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் டச்சு வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம் லட்சுமி கட்டிடத்தில் உள்ள அச்சகத்தில் 28-05-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது